Kanton Zürich
Bildungsdirektion

**தாய்மொழி மற்றும் கலாச்சார (HSK) படிப்பு குறித்த பெற்றோருக்கான தகவல்**

Volksschulamt
Besondere Förderung, Interkulturelle Pädagogik
ikp@vsa.zh.ch

Juli 2020


**Tamilisch**
Fassung Oktober 2013, aktualisiert Juni 2020

## HSK பாடம்  என்றால் என்ன?

தாய்மொழி மற்றும் கலாச்சார (HSK)  பாடங்கள்  ஜெர்மன் மொழி முதல் அல்லது இரண்டாம் அல்லாத மொழி உள்ள குழந்தைகளுக்கு மேலதிகமாக கற்பிக்கப்படும். மழலையர் பள்ளி முதல் ஒன்பதாம் வகுப்பு  இறுதி வரை மாணவர்கள் HSK வகுப்புகளில் கலந்து கொள்ளலாம்.

HSK பாடங்கள் குறிப்பாக தாய்  மொழி மற்றும்  மொழிப் பகுதியைப் பற்றிய பின்னணி அறிவை வழங்குகின்றன. பாடங்கள் அரசியல் மற்றும் மத ரீதியாகவும் நடுநிலையாக இருக்கும் . இது வெவ்வேறு வாழ்க்கைச் சூழல்கள் மற்றும் இணைப்புகளைக் கையாள்கிறது. இது மாணவர்களின் மொழித் திறனை வலுப்படுத்துகிறது மற்றும் அவர்களின் அடையாளக் கட்டமைப்பிலும் ஒருங்கிணைப்பிலும் அவர்களை ஆதரிக்கிறது. இந்த வகுப்பில் கலந்து கொள்ளவதை  கல்வி இயக்குநர் பரிந்துரைக்கிறார்.

## HSK வகுப்பு எவ்வாறு ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது?

சூரிச் தொடக்கப்பள்ளி சட்டத்தில் HSK படிப்பு சேர்க்கப்பட்டிருக்கிறது. மாநில கல்வி அமைச்சு (VSA) படிப்புகளில் சேருவதற்கும் ஒருங்கிணைப்புக்கும் பொறுப்பாகும். பாடங்கள்  தூதரகங்கள் மற்றும் பொது சங்கங்களால் வழங்கப்படுகின்றன. அவர்கள் HSK படிப்பு ஏற்பாடுகள்  மற்றும் HSK ஆசிரியர்களை நியமிக்கிறார்கள். அதனால்தான் HSK பாடத்தில் மொழி பாடங்கள் மட்டுமே உள்ளன. VSA வகுப்புகளை வழங்காது.

மாநில  தேவைகளைப் பூர்த்தி செய்யும் HSK படிப்புகள் அங்கீகரிக்கப்பட்ட HSK படிப்புகள் என்று அழைக்கப்படுகின்றன. அவை பின்வரும் அடிப்படை மதிப்பிடை  பூர்த்தி செய்கின்றன:

- பாடங்கள் அரசியல் ரீதியாகவும், மத ரீதியாகவும் நடுநிலையானவை மற்றும் மொழி பிரிவில்  உள்ள அனைத்து குழந்தைகளுக்கும் இது திறந்திருக்கும்.
- பாடங்கள் இலாபத்திற்காக அல்ல. பாடசாலை கட்டணம் வசூலிப்பது பாடங்களைப் பாதுகாக்க உதவுகிறது.
- ஆசிரியர்கள் கல்வியியல் தகுதி உடையவர்கள். ஜெர்மன் மொழியைப் பற்றிய போதுமான அறிவு மற்றும் தொடக்கப் பள்ளி அலுவலகத்தில் கட்டாய மேல் பயிற்சியில் கலந்துகொண்டவர்கள்.

மேல் குறிப்பிட்ட விபரங்களை நிறைவேற்றும் படிப்புகள் பாடசாலை  அறைகளை இலவசமாகப் பயன்படுத்தவும், சூரிச் பாடசாலை  அதிகாரப்பூர்வ சான்றிதழில் HSK தரத்தை உள்ளிடவும் அனுமதிக்கப்படும்.

## வகுப்பு நேரங்கள்

பாடங்களின் எண்ணிக்கை சட்டத்தால் பரிந்துரைக்கப்படுகிறது. மழலையர் பள்ளி மட்டத்திலும், 1 ஆம் வகுப்பிலும் இரண்டு பாடங்கள் வரை அனுமதிக்கப்படுகிறது. 2 ஆம் வகுப்பு முதல் வாரத்திற்கு நான்கு பாடங்கள் அனுமதிக்கப்படுகிறது

HSK பாடங்கள்  வழக்கமான பள்ளி நேரங்களுக்கு அப்பால்  நடைபெறும். பள்ளி நேரத்தில் பாடங்கள் நடந்தால், குழந்தைகள் மற்றும் இளம் பருவத்தினர் சாதாரண பாடங்களிலிருந்து அதிகபட்சம் இரண்டு பாடங்களில்  விலகலாம் . இது பற்றி  பெற்றோர் முன்கூட்டியே பள்ளி நிர்வாகத்திடம் ஒரு விண்ணப்பத்தை சமர்ப்பிக்க வேண்டும். எந்த வகுப்புகள் குழந்தைக்கு அதிக பயன்  செய்கின்றன என்பதைக் கருத்தில் கொள்வது அவசியம். இது தொடர்பாக  நீங்கள் எப்போதும் வகுப்பு ஆசிரியருடன் கலந்தாலோசிக்க VSA பரிந்துரைக்கிறது.

**வகுப்பு மற்றும் ஆன்லைன் கால அட்டவணை**

HSK பாடங்கள் பொதுவாக பொது ஆரம்ப  பள்ளியின் அறைகளில், முடிந்தால் குழந்தைகள் வசிக்கும் இடத்திற்கு அருகில் நடைபெறும். சில தனிப்பட்ட HSK நடத்துனர்கள்  தங்கள் சொந்த வளாகங்களைக் கொண்டுள்ளனர்.

மாநில ஆன்லைன் கால அட்டவணையில் (https://www.hsk-kantonzuerich.ch/) அனைத்து மொழிகள், கற்பிக்கும் இடங்கள் மற்றும் நேரங்களின் கண்ணோட்டத்தை நீங்கள் காணலாம். மொழி, தகுதி மற்றும் இருப்பிடம் ஆகியவற்றின் அடிப்படையில் உங்கள் பிள்ளைக்கு பொருத்தமான HSK பாடங்களை அங்கே  தேடலாம்.

**பள்ளி சான்றிதழில் HSK தரம்**

HSK ஆசிரியர் HASK வகுப்புகளில் 1–6 தரத்துடன் குழந்தைகளின் செயல்திறன் மற்றும் கற்றல் முன்னேற்றத்தை மதிப்பீடு செய்து பாடசாலை  சான்றிதலில் படிவத்தில்  நுழைகிறார். வகுப்பு ஆசிரியர் இந்த தரத்தை சூரிச்  பள்ளியின் அதிகாரப்பூர்வ சான்றிதழுக்கு மாற்றுவார். HSK வகுப்புகளில் கலந்துகொள்வதை பெரும்பாலான நாடுகள் அதிகாரப்பூர்வமாக அங்கீகரிக்கின்றன.

**எனது குழந்தையை எவ்வாறு பதிவு செய்வது?**

வகுப்பில் நுழைவு பொதுவாக ஒரு பள்ளி ஆண்டின் தொடக்கத்தில் நடைபெறும். சூரிச் மாநிலத்தில்  உள்ள அனைத்து பள்ளிகளும் ஜனவரி மாதம் VSA லிருந்து அங்கீகரிக்கப்பட்ட HSK படிப்புகளுக்கு  HSK பதிவு துண்டுப்பிரசுரம்  வழங்குவார்கள். இது மாணவர்களுக்கும்  விநியோகிக்கப்படுகிறது. மார்ச் மாத இறுதிக்குள் பெற்றோர் பதிவு செய்யலாம். அதாவது புதிய பள்ளி ஆண்டு தொடங்குவதற்கு சுமார் 4 மாதங்களுக்கு முன்பு.  உங்கள் குழந்தைகளை நேரடியாக வகுப்புவழங்கும் அமைப்பிடவும்  பதிவு செய்யலாம் அல்லது HSK துண்டுப்பிரசுரத்தில்   உள்ள  இணையத்தளத்தில்  ஆன்லைனில் பதிவுசெய்யலாம்.

பாடம் வழங்குநரைப் பொறுத்து, HSK படிப்புகள் இலவசம் (உதாரணமாக தூதரகம் செலவுகளைச் சுமப்பதால்) அல்லது இது கட்டணத்திற்கு உட்பட்டது. பள்ளி கட்டணம் உங்களுக்கு அதிகமாக இருந்தால், துண்டுப்பிரசுரத்தில் உள்ள ஒருங்கிணைப்பாளரைத் தொடர்பு கொள்ளுங்கள். சமூக உதவி சலுகை (சோசல் பணம் பெறும் பெற்றோர்) இந்த படிப்பு செலவுகளுக்கு நகராட்சிகள் உதவியை நாடலாம்.

**HSK பாடங்களின் நன்மைகள் என்ன?**
நல்ல HSK பாடங்கள் பின்வரும் நன்மைகளை வழங்குகின்றன:

- ✓ குழந்தைகள் மற்றும் இளம் பருவத்தினர் முதல் மொழியைப் பற்றிய அறிவை ஆழப்படுத்துகிறார்கள். மொழியை விளங்குவதிலும், பேசுவதிலும், வாசிப்பதிலும் மற்றும் எழுதுவதிலும் திறமை வளரும்.. இது ஒரு சிறப்பு அம்சம் .
- ✓ தாய் மொழியில் தேர்ச்சி இருந்தால், நீங்கள் பொதுவாக ஜெர்மன் மற்றும் வெளிநாட்டு மொழிகளை எளிதாகக் கற்றுக்கொள்வீர்கள்.
- ✓ HSK பாடங்கள் பொதுவாக பாடசாலையில் ஏனைய பாடங்களின் கற்றல் வெற்றியில் சாதகமான தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும், ஏனெனில் அவை தன்னம்பிக்கையையும் பொது அறிவையும் வழக்கின்றன .
- ✓ உலகமயமாக்கப்பட்ட உலகில் வெற்றிகரமான தொழில் வளர்ச்சிக்கு பன்மொழி அறிவு ஒரு மதிப்புமிக்க வளமாகும்.
- ✓ முதல் மொழியைப் பற்றிய நல்ல அறிவு, குடும்பத்திலும் உறவினர்களுடனும் தொடர்புகளைப் பேணுவதற்கு குழந்தைகளுக்கு உதவுகிறது மற்றும் பிறப்பிடமான நாடு அல்லது மொழிப் பகுதிக்கு திரும்புவதற்கு உதவுகிறது.

**உங்கள் குழந்தையின் பன்மொழி வளர்ச்சியை ஒரு பெற்றோராக நீங்கள் எவ்வாறு ஆதரவு செய்யயலாம் ?**

உங்கள் குழந்தையுடன் நீங்கள் தன்னிச்சையாகவும் இயற்கையாகவும் பேசும் மொழியில் பேசுங்கள். அந்நிய மொழி பெற்றோர்கள் பிள்ளைகளுடன் ஜெர்மன் பேசினால் பள்ளியில் ஒரு குழந்தைக்கு சுலபமாக இருக்கும் என்று கருதுவது தவறு.

உங்கள் குழந்தையுடன் பேசும்போது, உங்கள் மொழியையும் ஜெர்மன் மொழியையும் கலப்பதைத் தவிர்க்கவும். குழந்தை ஜெர்மன் மொழியில் பதிலளித்தாலும் உங்கள் மொழியில் நீங்கள் பதிலளியுங்கள். அவர்கள் எந்த மொழியில் பதிலளிக்க விரும்புகிறார்கள் என்பதை உங்கள் பிள்ளை தேர்வு செய்யட்டும்.

தந்தையும் தாயும் வெவ்வேறு மொழிகளைப் பேசினால், அவர்கள் தங்கள் குழந்தையுடனும் இதைச் செய்யலாம். தெளிவான விதிகள் இங்கே முக்கியம்: "அம்மா இந்த மொழியைப் பேசுகிறார், அப்பா மற்ற மொழியை பேசுகிறார், நாங்கள் ஒன்றாகச் சாப்பிடும்போது ஒரு மொழியில் பேசுகிறோம்."

உங்கள் பிள்ளை உங்கள் மொழியைப் புரிந்து கொண்டாலும் ஒரு குறிப்பிட்ட கட்டத்தில் ஜெர்மன் மட்டுமே பேசுவார். நீங்கள் தொடர்ந்து உங்கள் மொழியில் கதைத்தால், குழந்தை தொடர்ந்து கேட்பதைக் கற்றுக் கொள்ளும் மற்றும் நிச்சயமாக உங்கள் மொழியை பின்னர் பேசுவார்.

படப் புத்தகங்களைப் பார்ப்பது, பாடுவது, இசை கேட்பது, கதைகளைச் சொல்வது அல்லது சத்தமாக வாசிப்பதன் மூலம் உங்கள் குழந்தையின் மொழியின் இன்பத்தை ஆதரிக்கவும்.

சிறு வயதிலிருந்தே உங்கள் பிள்ளைக்கு ஜெர்மன் மொழியுடன் நிறைய தொடர்பு இருப்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். ஜெர்மன் மொழியை நீங்களும் கற்றுக் கொள்ளுங்கள். உங்கள் பிள்ளைக்கு நீங்கள் ஒரு முன்மாதிரி.

உங்கள் பிள்ளையை HSK பாடங்களுக்கு அனுப்புங்கள் (முடிந்தால் மழலையர் பள்ளியிலிருந்து) அவர்கள் அங்கு என்ன கற்றுக் கொள்கிறார்கள் என்பதைத் தவறாமல் சொல்லட்டும். வழக்கமான பாடசாலை  ஆசிரியர்கள் மற்றும் HSK தமிழ் ஆசிரியர்களுடனும்  தொடர்பைப் பேணுங்கள்.